www.tamilarangam.net



# புதிய ஜனநாயகக் கட்சியும் அதன் பாராளுமன்ற மார்க்கமும்

இத் தலைப்பில் பாரிஸில் ஓர் கலந்துரையாடல் நடைபெற்றது. இக் கலந்துரையாடலின் போது கேட்கப்பட்ட கேள்விகளும், கட்சியின் சார்பில் அளிக்கப்பட்ட பதில்களும் :

கேள்வி : பாராளுமன்றம் சம்பந்தமாக உங்கள் நிலைப்பாடு என்ன ?

பதில் : புதிய ஜனநாயகக் கட்சி பாராளுமன்றத்தின் மூலம் சமுதாய மாற்றத்தையோ, நாட்டு மக்களின் பிரச்சினைகளையோ முற்று முழுதாக தீர்க்க முடியும் என்ற கொள்கைகளையோ கோட்பாட்டையோ நம்பவில்லை. மாறாக பாராளுமன்றத்திற்கு அப்பால் புரட்சிகர வெகுஜனப் போரின் மூலமே சமுதாய மாற்றத்தையும், அதன் ஊடாக ஏற்படும் புதிய அரசின் மூலம் நீண்ட கால நோக்கிலான சரியான வேலைத்திட்டங்களின் ஊடே நாட்டு மக்களின் பிரச்சினைகளை முற்று முழுதாக தீர்க்க முடியும் என்பதையே நம்புகின்றது.

கேள்வி : அப்படியானால் நீங்கள் ஏன் பாராளுமன்றத் தேர்தலில் பங்கு கொள்கின்றீர்கள் ?

பதில் : சமுதாய மாற்றத்தையும் புரட்சிகர வெகுஜனப் போராட்ட மார்க்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட எமது கட்சி தனது வேலைத்திட்டங்களை இரண்டு வகையாக வகுத்துள்ளது. ஒன்று நீண்ட கால நோக்கிலான வேலைத்திட்டம். இரண்டாவது சமகால நோக்கிலான வேலைத்திட்டம். சமகால வேலைத்திட்டத்தின் நோக்கில் பாராளுமன்றத்தையும் ஒரு கருவியாக பாவிக்க முடியும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தேர்தலில் பங்கு கொள்கின்றது.

கேள்வி : இதைத்தானே பீட்டர் கெனமன் விக்கிரமசிங்கா போன்றவர்களும் சொன்னார்கள் ?

பதில் : அவர்கள் சொல்லவும் இல்லை, செய்யவும் இல்லை.

கேள்வி : இதை சற்று விரிவாக சொல்ல முடியுமா ?

பதில் : 1960-ம் ஆண்டுகளை அண்மித்த காலப்பகுதிகளில் சர்வதேச ரீதியாக ஓர் மார்க்ஸிய அரசியல் தத்துவப் போர் ஆரம்பமாகியது. ஆயுதப்போராட்டமின்றி பாராளுமன்றத்தின் மூலம் சமுதாய மாற்றத்தையும், பொதுவுடமை சமுதாயத்தையும் உருவாக்க முடியும் என்பதே தத்துவப் போரின் பிரதான அம்சம். இதை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியே முன் வைத்தது. இக்கோட்பாட்டை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட உலகின் புரட்சிகர சக்திகள் அனைத்தும் நிராகரித்தன. இதன் மூலம் சர்வதேச ரீதியாக கம்யூனிஸ்ட் கட்சிகள் பிளவுபட்டன. இலங்கையில் விக்கிரமசிங்கா, பீட்டர் கெனமன் தலைமையிலும், சண்முகதாசன் தலைமையிலும் கட்சிகள் பிளவுபட்டன.

1970-ம் ஆண்டு தேர்தலின் பின் பீட்டர் கெனமன் விக்கிரமசிங்கா தலைமை பாராளுமன்றத்தின் மூலம் சமுதாய மாற்றம், பொதுவுடமை சமுதாயம் ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்கில் ஸ்ரீமாவோ தலைமையிலான அரசில் மந்திரிகளாகவும், அதன் பங்காளிகளாகவும் மாறினர். ஏழு வருடங்களில் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கும், மக்கள் விரோத சட்டங்களை இயற்றுவதற்கும் துணை போனார்கள். தரப்படுத்தலை கொண்டுவரவும், தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் சட்டங்களை உருவாக்கவும் அதை நடைமுறைப்படுத்தவும் துணை போனார்கள். மொத்தத்தில் தமிழ் - சிங்கள மக்களின் விரோதிகளாகவும் மாறினார்கள்.

கேள்வி : இதைத் தானே ஜனநாயக நீரோட்டக் கட்சிகளும் செய்து கொண்டிருக்கின்றன ?

பதில் : ஒப்பீட்டு வகையில் மக்களுக்கு துரோகம் செய்த பாராளுமன்ற இடது சாரிகளை விட தமிழ் ஈழத்திற்காக புறப்பட்ட அத்தனை இயக்கங்களும், கட்சிகளும் தமிழ் - முஸ்லீம் மக்களை துன்புறுத்துவதில் - கஸ்டப்படுத்துவதில் முன்னணிப் பாத்திரத்தை வகித்தார்கள் - வகிக்கின்றார்கள் என்று சொன்னால் அது ஓர் மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல. அடுத்து ஜனநாயக நீரோட்டக்கட்சிகள் தமிழ் மக்கள் [ இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் ] தாங்கள் சொல்வதையே கைகட்டி, வாய்பொத்தி செய்ய வேண்டும் என்று நினைக்கும் போய் மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடிப்பதோடு தாங்களும் போராட்ட வாழ்வில் நின்று அந்நியப்பட்டு விட்டார்கள். இன-மத-நிற-சாதி ரீதியாக அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களின் [ ஆயுதப் போர் ] மூலமே விடுதலையை அடைய முடியும். தமிழ் கட்சிகள் இதுபற்றிய புரிதல்கள் - முன்னெடுப்புக்கள் பற்றிய அக்கறையின்றி தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் பேரினவாத அரசுகளின் பங்காளிகளாகவும், ஒடுக்கு முறைக்கு துணை போபவர்களாகவும் மாறியுள்ளார்கள். இது இவர்களை பிடித்துள்ள அரசியல் தொற்று நோய் என்றே சொல்ல வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்வி : கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவின் பின் சண் தலைமையிலான கட்சி நீங்கள் சொல்வது போல் நீண்டகால - சமகால வேலைத்திட்டங்களின் அடிப்படையில் செயற்பட்டார்களா ?

பதில் : ஆம் இரண்டு வேலை முறைகளும் இருந்தன. 1965-ம் ஆண்டுகளை அண்மித்த காலப்பகுதிகளில் வடபகுதி தமிழ் மக்கள் மத்தியில் அன்றைய சமகாலப் பிரச்சினையாக இருந்த சாதி தீண்டாமைப் பிரச்சினையை ஆராய்ந்து அதற்கெதிரான வெகுஜனப் போராட்டங்களையும் [ ஆலய  தேனீர்க்கடைப் பிரவேசம் ] முன்னெடுத்தனர். அத்துடன் பாராளுமன்றத்தையும் ஓர் கருவியாக பாவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் கட்சி 1965-ம் ஆண்டு தேர்தலில் சண்முகதாசன் அவர்களை வேட்பாளராக நிறுத்தியது.

கேள்வி : சண்முகதாசன் இத்தேர்தலில் வெற்றி பெறவில்லையே ?

பதில் : ஓர் புரட்சிகர வெகுஜனக் கட்சிக்கு வெற்றி தோல்வியை விட, தேர்தலை ஓர் களமாகப் பாவிப்பது, தேர்தல் மூலம் மக்களுக்கு என்ன சொல்கின்றது என்பதுமே முக்கியமாகும். அத்துடன் தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் பாராளுமன்றத்தை எப்படி பாவிப்பது என்பதுமே முக்கிய பிரச்சினையாகும்.

கேள்வி : இத் தேர்தலை புதிய ஜனநாயகக் கட்சி எவ்வாறு கையாளுகின்றது ?

பதில் : நியமனப் பத்திரம் தாக்கல் செய்த பின்னர் யாழ்நகரில் பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய கட்சியின் செயலாளர் கே. செந்திவேல் அவர்கள் உரையாற்றிய செய்தியை [ உதயன் பத்திரிகை  27-10-2001 ] பதிலாகத் தருகின்றோம்.

எமது கட்சியின் இலக்கு இரண்டு பேரினவாத ஆளும்வர்க்க கட்சிகளுக்கு ஆதரவோ அடிபணிதலோ இன்றி மக்களது அரசியல் தார்மீக பலத்தைக் கட்டி எழுப்பி அரசியல் விழிப்புணர்வுக்கு வழி சமைப்பதே ஆகும். இதனை முன்னெடுப்பதற்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை ஒரு போராட்டக் களமாகப் பயன்படுத்துவதே தேர்தலில் பங்குகொள்வதன் எமது நோக்கமாகும்.

கேள்வி : தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக உங்கள் நிலைப்பாடு என்ன ?

பதில் : சுயநிர்ணய உரிமை கோட்பாட்டின் உண்மையான புரிதல்களின் அடிப்படையில் வட-கிழக்கு இணைந்த சுயாட்சி அமைப்பொன்றையும், அவ் அமைப்பில் யாருடைய கட்டுப்பாடு நிர்ப்பந்தங்களுமின்றி முஸ்லீம் மக்கள் தங்களைத் தாங்கள் நிர்வகிக்கும் உள்ளாட்சி அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்துவதுமே எங்கள் நோக்காகும்.

கேள்வி : இன ஒடுக்கு முறை என்றும் இல்லாதவாறு இலங்கையின் தேசிய அரசியல் வாழ்வில் பிரதான முரண்பாடாக உருப்பெற்றுள்ளது. இதை உடனடியாக குறைக்க ஏதாவது வழிகள் உண்டா ?

பதில் : உண்டு. யுத்த நிறுத்தமும், அத்துடன் எவ்வித உள்நோக்கமும் இன்றி அந்தரங்க சுத்தியுடன் நாட்டு மக்களின் நலனை கணக்கில் கொண்ட அரசியல் பேச்சு வார்த்தைகளும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கேள்வி : யுத்த நிறுத்தம் பற்றி விடுதலைப் புலிகளுடன் அல்லவா பேசவேண்டும் ?

பதில் : யுத்த நிறுத்தம் மட்டுமல்ல, பேச்சு வார்த்தை என்ற ஒன்று வந்தால் கூட அவர்களுடனேயே பேச வேண்டும். காரணம் தமிழ் மக்களின் போராட்ட வாழ்வில் அவர்கள் பின்னிப் பிணைந்து  உள்ளார்கள்.

கேள்வி : ஐக்கிய இலங்கையின் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியுமென பேரின வாதிகளும் அவர்களின் கூட்டாளிகளும் தனித் தமிழீழத்தின் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து போகுமென தமிழ்  தேசிய வாதிகளும் கூறுகின்றார்கள். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன ?

பதில் : பேரின வாதிகளும் அவர்களது கூட்டாளிகளும் கூறும் ஐக்கிய இலங்கை என்பது ஒற்றை ஆட்சியின் கீழ் பௌத்த-சிங்கள அரசும் [இலங்கை ஓர் பல்லின நாடு அல்ல] அவ் அரசுகளின் விருப்பத்தின் பேரில் தாங்கள் கொடுப்பதை தமிழ் மக்கள் ஏற்கவேண்டும் என்ற நிலைப்பாடுமேயாகும். இது தான் கடந்த அரை நூற்றாண்டு அரசியலும் அதன் விளைவுகளுமாகும். இதனாலேயே தமிழ் ஈழக் கோரிக்கை கூட எழுந்தது. எனவே ஒற்றையாட்சியின் கீழ் ஐக்கிய இலங்கை என்று அலட்டிக்கொள்வதில் அர்த்தம் இல்லை. மறுபுறத்தில் தமிழ் ஈழத்தின் மூலம் [தமிழ் மக்கள் தங்களை தாங்கள் ஆள்வது] தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து விடும் என்ற கோட்பாட்டில் எவ்வளவு உண்மை உள்ளது என்பது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டைத் தீர்மானமாகவும், 77-ல் தேர்தல் கோரிக்கையாகவும் வைத்த தமிழ் ஈழக் கோரிக்கையை இளைஞர் இயக்கங்கள் எவ்வித மறு பரிசீலனைகளும் இன்றி, அதை ஆயுதப்போராட்டமாக முன்னெடுத்தனர். உண்மையில் தனித் தமிழ் ஈழக் கோரிக்கைக்குள் முழுத் தமிழ் மக்களின் [மலையக-முஸ்லீம்-சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட] அபிலாசைகள் உள்ளடக்கப்படவில்லை. நாம் இதை துல்லியமாக கண்டு கொள்ள முடியும். அடுத்து இனத்தை இனம் ஆள்வதன் மூலம் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்றால் இன்று சிங்கள மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்திருக்க வேண்டும். அத்தோடு இன்று உலகின் பல பாகங்களில் இனத்தை இனம் ஆளும் அரசுகள் உண்டு. இதன் மூலம் அம்மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடவில்லை.

எனவே இன்றைய அரசியல் சூழ்நிலையில் மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றை தோற்றுவிக்க வேண்டும். இச்சக்தி பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பல முனைகளிலும் பரந்த ஐக்கியத்தோடு பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக உறுதி மிக்க வெகுஜன ஆயுதப்போராட்டத்தை [நடைபெற்று வரும் விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு குறுக்கே நில்லாது] முன்னெடுக்கப்பட வேண்டும்.

கேள்வி : மலையக மக்கள் பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன ?

பதில் : கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாக மலையகத்தில் வாழ்ந்து வரும் மலையக மக்கள் தமது இனத் தனித்துவங்களையும், தன்னடையாளங்களையும் பேணிப்பாதுகாத்து விருத்தி செய்யும் வகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களுக்கான சுயாட்சி உள்அமைப்புக்களை உருவாக்குவதேயாகும். இச்சுயாட்சி அமைப்பானது அவர்கள் செறிவாக வாழ்ந்து வரும் மத்திய, ஊவா, சப்பிரகமுவா மாகாணங்களை உள்ளடக்கியதாக அமைப்பதேயாகும்.

கேள்வி : தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரிதாக சொல்லாத, கண்டு கொள்ளாத ஓர் விடயத்தில் [சாதி-தீண்டாமை] நீங்கள் மிக இறுக்கமாக ஊன்றி நிற்கின்றீர்கள் இதைப்பற்றி சொல்ல முடியுமா ?

பதில் : நாம் இப்பிரச்சினை பற்றி பெரிதுபடுத்தி ஒன்றும் சொல்லவில்லை. உண்மை நிலைமைகளையே சொல்லுகின்றோம். உண்மைகளைச் சொல்லும் போது செந்திவேலும், புதிய ஜனநாயகக் கட்சிக்காரர்களும் தேவையில்லா "விழல்" வேலை பார்கின்றார்கள் என்று எம்மீது கோபப்படுபவர்களும் உண்டு.


வடபகுதியின் தமிழ் மக்கள் மத்தியில் ஒடுக்கப்பட்ட மக்கள் மூன்றில் ஒரு பங்கினராவார். அவர்கள் சாதி-தீண்டாமையால் எவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்டார்கள் என்பது [அடிமை-குடிமை முறை அனுபவம்] தமிழ் தலைமைக்கு புரியாது காரணம் இவர்களும், இவர்களின் முன்னோர்களும் தான் [ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆளநினைப்பதில் என்ன குறை என்று சொல்பவர்கள்] இம்மக்களை அடக்கி ஒடுக்கியவர்கள். இதனால் இவர்கள் இப்பிரச்சினையை பெரிதாக கண்டு கொள்ளமாட்டார்கள்.

வடபகுதியில் சாதி-தீண்டாமை முற்றுமுழுதாக ஒழிந்து விடவில்லை. அதன் வெளிபாடு தற்போதும் உள்ளது. நிலமின்மையாலும் பொருளாதார, கல்வி, தொழில் ஆகியவற்றில் பின் தங்கிய தாழ்த்தப்பட்ட சமுதாயப் பிரிவினராகவே உள்ளனர். இந்நிலையை மாற்றி அவர்களினால் சமூக முன்னேற்ற வசதிகளும், வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படவேண்டும். இதையே வலியுறுத்துகின்றோம்.

கேள்வி : இது போன்ற பிரச்சாரங்களின் மூலம் புலம் பெயர் மக்களிடம் எதை எதிர்பார்கின்றீர்கள் ?

பதில் : புலம் பெயர் தமிழ் மக்களுக்கு தேர்தல் சம்பந்தமாக புதிய ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாட்டை எடுத்துச் சொல்வதுடன், இங்குள்ள மக்கள் தாயகத்தில் உள்ள தங்கள் உறவுகளோடு தொடர்புகளை கொண்டு கட்சியின் மணிக்கூட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்க உதவி செய்ய முடியும். இப் பங்களிப்பை வழங்கவேண்டும். இதையே புலம் பெயர் மக்களிடம் அன்புடன் வேண்டுகின்றோம். அத்துடன் ஏனைய பாராளுமன்றக் கட்சிகளைப் போல், நாமும் தேர்தலோடு எமது சந்திப்புக்கள், கலந்துரையாடல்களை நிறுத்தி விட மாட்டோம். தேர்தல் வெற்றி தோல்விகளோடு நின்று விடாது தொடர்ந்தும் இது போன்ற கலந்துரையாடல்களை செய்வோம்.

## பேரினவாத ஆளும்வர்க்க கட்சிகளுக்கு அடிபணியாது புரட்சிகர வெகுஜனப் பாதையில் தமிழ்-முஸ்லிம்-மலையக மக்களினதும் சாதி-தீண்டாமையினால் ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் புதிய ஜனநாயகக் கட்சியின் மணிக்கூட்டுச் சின்னத்திற்கு எம் தாயகத்தின் உறவுகளை வாக்களிக்க செய்திடுவீர்.



புதிய ஜனநாயகக் கட்சியின் ஐரோப்பியக் கிளை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களுக்கான சுயாட்சி உள்அமைப்புக்களை உருவாக்குவதேயாகும். இச்சுயாட்சி அமைப்பானது அவர்கள் செறிவாக வாழ்ந்து வரும் மத்திய, ஊவா, சப்பிரமுவா மாகாணங்களை உள்ளடக்கியதாக அமைப்பதேயாகும்.

கேள்வி : தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரிதாக சொல்லாத, கண்டு கொள்ளாத ஓர் விடயத்தில் [சாதி-தீண்டாமை] நீங்கள் மிக இறுக்கமாக ஊன்றி நிற்கின்றீர்கள் இதைப்பற்றி சொல்ல முடியுமா ?

பதில் : நாம் இப்பிரச்சினை பற்றி பெரிதுபடுத்தி ஒன்றும் சொல்லவில்லை. உண்மை நிலைமைகளையே சொல்லுகின்றோம். உண்மைகளைச் சொல்லும் போது செந்திவேலும், புதிய ஜனநாயகக் கட்சிக்காரர்களும் தேவையில்லா "விழல்" வேலை பார்கின்றார்கள் என்று எம்மீது கோபப்படுபவர்களும் உண்டு.


வடபகுதியின் தமிழ் மக்கள் மத்தியில் ஒடுக்கப்பட்ட மக்கள் மூன்றில் ஒரு பங்கினராவார். அவர்கள் சாதி-தீண்டாமையால் எவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்டார்கள் என்பது [அடிமை-குடிமை முறை அனுபவம்] தமிழ் தலைமைக்கு புரியாது காரணம் இவர்களும், இவர்களின் முன்னோர்களும் தான் [ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆளநினைப்பதில் என்ன குறை என்று சொல்பவர்கள்] இம்மக்களை அடக்கி ஒடுக்கியவர்கள். இதனால் இவர்கள் இப்பிரச்சினையை பெரிதாக கண்டு கொள்ளமாட்டார்கள்.

வடபகுதியில் சாதி-தீண்டாமை முற்றுமுழுதாக ஒழிந்து விடவில்லை. அதன் வெளிப்பாடு தற்போதும் உள்ளது. நிலமின்மையாலும் பொருளாதார, கல்வி, தொழில் ஆகியவற்றில் பின் தங்கிய தாழ்த்தப்பட்ட சமுதாயப் பிரிவினராகவே உள்ளனர். இந்நிலையை மாற்றி அவர்களினால் சமூக முன்னேற்ற வசதிகளும், வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படவேண்டும். இதையே வலியுறுத்துகின்றோம்.

கேள்வி : இது போன்ற பிரச்சாரங்களின் மூலம் புலம் பெயர் மக்களிடம் எதை எதிர்பார்கின்றீர்கள் ?

பதில் : புலம் பெயர் தமிழ் மக்களுக்கு தேர்தல் சம்பந்தமாக புதிய ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாட்டை எடுத்துச் சொல்வதுடன், இங்குள்ள மக்கள் தாயகத்தில் உள்ள தங்கள் உறவுகளோடு தொடர்புகளை கொண்டு கட்சியின் மணிக்கூட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்க உதவி செய்ய முடியும். இப் பங்களிப்பை வழங்கவேண்டும். இதையே புலம் பெயர் மக்களிடம் அன்புடன் வேண்டுகின்றோம். அத்துடன் ஏனைய பாராளுமன்றக் கட்சிகளைப் போல், நாமும் தேர்தலோடு எமது சந்திப்புக்கள், கலந்துரையாடல்களை நிறுத்தி விட மாட்டோம். தேர்தல் வெற்றி தோல்விகளோடு நின்று விடாது தொடர்ந்தும் இது போன்ற கலந்துரையாடல்களை செய்வோம்.

## பேரினவாத ஆளும்வர்க்க கட்சிகளுக்கு அடிபணியாது புரட்சிகர வெகுஜனப் பாதையில் தமிழ்-முஸ்லீம்-மலையக மக்களினதும் சாதி-தீண்டாமையினால் ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் புதிய ஜனநாயகக் கட்சியின் மணிக்கூட்டுச் சின்னத்திற்கு எம் தாயகத்தின் உறவுகளை வாக்களிக்க செய்திடுவோம்.



புதிய ஜனநாயகக் கட்சியின்
ஐரோப்பியக் கிளை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்